செ.வெ.எண்: 132 23.2.09

**பத்திரிக்கை செய்தி**

சிறுபான்மையின மக்களின் நலனைப் பேணிக்காப்பதில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு இந்தியாவிலேயே முன்னோடியாக விளங்கிவருகிறது. கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் சிறுபான்மையின மக்களும் இதர பிரிவினருக்கு சமமாக முன்னேற்றம் அடைவதில் இவ்வரசு முனைப்பாக செயல்படுகிறது. கல்வியே சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவதால், சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டம் (Merit cum Means based Scholarship Scheme) பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம் ஆகியவற்றினை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகளில் தொழில்/தொழில்நுட்பம் சார்ந்த இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இவ்வுதவித்தொகை பெற பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும். முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் 50 விழுக்காடுக்குக் குறையாமல் மதிப்பெண் பெற்றிருக்கவேண்டும். இத்திட்டத்தின்கீழ் ஒரு வருடத்திற்கான கல்விக்கட்டணம் அதிகபட்சமாக ரூ.20,000/-ம், விடுதியில் தங்கிப்பயில்பவர்களுக்கு

பராமரிப்புக் கட்டணமாக வருடத்திற்கு ரூ.10,000/–ம் விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு பராமரிப்புக் கட்டணமாக ரூ.5000/–ம் வழங்கப்படும். மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலுள்ள கல்லூரிகளில் பயில்பவர்களுக்கு அவர்கள் செலுத்திய கல்விக் கட்டணம் முழுமையாக வழங்கப்படும்.

பள்ளிமேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் 11ம் வகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும் மற்றும் முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் 50 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இவ்வுதவித்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் சேர்க்கை மற்றும் கல்விக்கட்டணமாக வருடத்திற்கு ரூ.3000/–முதல் ரூ.7000/–வரையிலும், பராமரிப்புக் கட்டணமாக விடுதியில் தங்கிப் பயில்பவராக இருப்பின் மாதமொன்றுக்கு ரூ.235 முதல் ரூ.510 வரையிலும், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.140 முதல் ரூ.330 வரை பத்து மாதங்களுக்கு வழங்கப்படும்.

பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும் மற்றும் முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் 50 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இவ்வுதவித்தொகை

வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், 6 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு சேர்க்கைக் கட்டணமாக வருடத்திற்கு அதிகபட்சமாக ரூ.500/–ம், கற்பிப்பு கட்டணமாக அதிகபட்சமாக வருடத்திற்கு ரூ.3500/–ம் பராமரிப்புக் கட்டணமாக 6முதல் 10ம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.600 வீதமும், விடுதியில் தங்காமல் 1 முதல் 10ம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கும் வழங்கப்படுகிறது.

இக்கல்வி உதவித்திட்டங்களின்கீழ் பயன்பெறுபவர்களில் குறைந்தபட்சம் 30 சதவிகிதம் பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

கல்வி உதவித்தொகை திட்டங்களின்கீழ் 2007–08ம் ஆண்டில் 4157 மாணவ மாணவியர்கள் ரூ.4.40 கோடி அளவில் பயன்பெற்றுள்ளார்கள். நடப்பாண்டில் 32,617 மாணவ, மாணவியர்களுக்கு மொத்தம் ரூ.9.68 கோடி அளவிற்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 50 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.9,66,250/–க்கான காசோலைகள் வழங்கி தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தலைவர் அருட்தந்தை சேவியர் அருள்ராஜ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலர் திரு.ந.வாசுதேவன் மற்றும் ஆணையர்கள் திருவாளர்கள் குமார் ஜயந்த் மற்றும் ப.அண்ணாமலை உடனிருந்தனர்.

| மத்திய – மாநில அரசுகளின் நிதி உதவியுடன் சிறுபான்மையின மாணவ–மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிய விவரங்கள் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | திட்டத்தின் | ஒதுக்கீடு | கிறித்துவர் | | | இஸ்லாமியர் | | | சீக்கியர் | புத்தமதத்தினர் | மொத்த பயனடைந்தவர்கள் | மொத்த கல்வி உதவித்தொகை |
| | | | மாணவர் | மாணவியர் | தொகை | மாணவர் | மாணவியர் | தொகை | | | | |
| | | | | | 2007–08 | | | | | | | |
| 1 | தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை | 1311 | 443 | 464 | 24210841 | 186 | 218 | 10319693 | 0 | 0 | 1311 | 34530534 |
| 2 | பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை | 2876 | 279 | 1207 | 5083537 | 420 | 940 | 4340949 | 0 | 0 | 2846 | 9424486 |
| | **மொத்தம்** | **4187** | **722** | **1671** | **29294378** | **606** | **1158** | **14660642** | **0** | **0** | **4157** | **43955020** |
| | | | | | 2008-09 | | | | | | | |
| 1 | தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை (புதியது) | 767 | 136 | 263 | 10215825 | 153 | 213 | 9620245 | 0 | 0 | 765 | 19836070 |
| 2 | தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை(புதுப்பித்தல்) | 1147 | 293 | 349 | 17163094 | 113 | 143 | 6659044 | 0 | 0 | 898 | 23822138 |
| 3 | பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை(புதியது) | 6711 | 867 | 2624 | 10308779 | 950 | 2252 | 9307172 | 0 | 0 | 6693 | 19615951 |
| 4 | பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை(புதுப்பித்தல்) | 1788 | 126 | 538 | 2259657 | 201 | 446 | 2211238 | 0 | 0 | 1311 | 4471895 |
| 5 | பள்ளி படிப்பு கல்வி உதவித்தொகை | 23010 | 4596 | 7374 | 15752450 | 4106 | 6874 | 13321778 | 0 | 0 | 22950 | 29074228 |
| | **மொத்தம்** | **33423** | **6018** | **11148** | **55699805** | **5523** | **9928** | **41119477** | **0** | **0** | **32617** | **96820282** |
| | **கூடுதல்** | **37610** | **6740** | **12819** | **84994183** | **6129** | **11086** | **55780119** | **0** | **0** | **36774** | **140775302** |

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9